புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மே 12, 2022 | புரட்சி 21 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00

# சங்கராபுரத்தில் மாபெரும் எழுச்சி





ஏப்ரல் 3 ஈரோட்டில் நடைபெற்ற கழகத்தின் செயலவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி, மாநில உரிமைகளைப் பறிக்காதே, கல்வி உரிமைகளைத் தடுக்காதே, மதவெறியைத் திணிக்காதே என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, நமக்கான அடையாளம் திராவிட மாடல் என்று மண்டல மாநாடு நடத்துவது, அதனை விளக்கி மக்கள் மத்தியில் பரப்புரை செய்வது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மூன்று மாவட்டங்கள் இணைந்து மே 3 ஆம் நாள் சங்கராபுரத்தில் மாநாட்டினை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. மாநாட்டின் நோக்கங்கள் அடங்கிய துண்டறிக்கைகள் 3000 எண்ணிக்கையில் அச்சடிக்கப்பட்டு மக்களிடையே பரப்பப்பட்டது. 27 இடங்களில் சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டது. 500 சுவரொட்டிகள் ஒட்டப் பட்டன. மாநாட்டின் நோக்கத்தை விளக்கியும், மாநாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்ததும் கள்ளக்குறிச்சியில் ஏழு இடங்களிலும், விழுப்புரத்தில் 10 இடங்களிலும் தெருமுனை பிரச்சாரங்கள் நடைபெற்றன.

மாநாடு சங்கராபுரம் பேருந்து நிலைய பொதுக் கூட்ட மேடையில் மாலை 5 மணியளவில் தொடங்கி யது. மாநாட்டின் தொடக்க நிகழ்வாக "விடுதலைக் குரல்" குழுவின் புரட்சிகரமான பாடல் இசையுடன் நடத்தப்பட்டது. குழுவின் பாடலானது மக்களை பெருமளவிற்கு மேடைக்கு அருகே ஈர்த்தது. விடுதலைக் குரல் குழுவிற்கு மக்கள் நன்கொடை வழங்கினர்.

மாநாட்டிற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் க.ராமர் தலைமை வகித்தார். கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் க.மதியழகன் வரவேற்பு கூறினார். விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் சாக்ரடீஸ் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கழக அமைப்பாளர் சி.சாமிதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநாட்டில், 85 வயது நிறைந்த திராவிடர் கழகத் தோழர் பெரியார் பெருந்தொண்டர் மு.கலைச் செழியன் மற்றும் 75 வயது நிறைந்த தமிழ் படைப்பாளர் சங்கத்தின் சங்கராபுரம் தலைவர் அரங்க செம்பியன் ஆகியோர் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டு மேடைக்கு மறைந்த கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர் மடத்துக் குளம் மோகன் நினைவாக பெயர் அமைக்கப் பட்டிருந்தது.

- சங்கராபுரம் மாநாடு மக்கள் கூட்டத்தில் நிரம்பி வழிந்தது.
- புதுவை 'விடுதலைக் குரல்' இசைக் குழுவினர் லெனின் சுப்பையா பாடல்களைப் பாடி நிகழ்ச்சிக்கு எழுச்சியூட்டினர்.
- சிறப்பு விருந்தினராக விடுதலை சிறுத்தைகள் கட்சித் துணைப் பொதுச் செயலாளர் வன்னிஅரசு பங்கேற்றுப் பேசினார்.

நிகழ்வில், கழத்தின் தலைமைக் குழு உறுப்பினர் நா. அய்யனார், விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ.இளையரசன், விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் சாக்ரடீஸ், பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தீனா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கள்ளக் குறிச்சி மாவட்ட செயலாளர் மு.தமிழ்மாறன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். கள்ளக்குறிச்சி மாவட்ட கழக துணைச் செயலாளர் மு.நாகராஜ் நன்றி கூறினார். மாநாட்டு நிகழ்வுகளை கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் க.ராமர் ஒருங்கிணைத்தார்.

பரப்புரை பயணத்திற்கான 3000 துண்டறிக்கைகளை கடுவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஏழுமலை நன்கொடையாக வழங்கினார். மாநாட்டிற்கான மாட்டுக்கறி பிரியாணியை கடுவனூரைச் சேர்ந்த கனகராஜ் ஏற்பாடு செய்தார்.

குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்ட மாநாட்டிற்காக, இரா. கார்மேகம், சி.சாமிதுரை, க.ராமர், பாக்கம் இராமச்சந்திரன், அழகர், பூபாலன், பெரியார் வெங்கட், ஆ.நாகராஜ், ந.வெற்றிவேல், ச.அன்புரவி, எடுத்தவாய் நத்தம் முருகன், புதியவன், சிவா, தமிழ், இளைய பெருமாள், மா.குமார், மு.குமரேசன், இரா.ஜீவா, மு.சபா, ஆ.அஜெய், கு.பாபா, இரா.வீரமணி ஆகியோர் கடுமையான களப்பணி செய்தனர். கழக வெளியீடுகள் ரூ.7500 க்கு விற்பனை ஆகின.

## பள்ளத்தூர் நாவலரசன் – தாமோதரன் – மந்திரமா தந்திரமா நிகழ்வுகளோடு

# மயிலாடுதுறையில் களை கட்டியது மாநாடு!





மயிலாடுதுறை கடலூர் நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டங்கள் இணைந்து மே 4ஆம் தேதி மயிலாடுதுறையில் மாநாட்டினை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது மயிலாடுதுறை மாவட்டத்தில் மாநாட்டின் நோக்கத்தினை வலியுறுத்தி 16 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. 10000 வண்ண துண்டறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு மக்களிடையே பரப்புரை செய்யப் பட்டது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 20 இடங்களில் சுவர் விளம்பரமும் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து 500 சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

மயிலாடுதுறை சின்னக்கடை வீதியில் மாலை 5 மணி அளவில் பள்ளத்தூர் நாவலரசு குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியுடன் மாநாட்டு நிகழ்வு தொடங்கியது.

மாநாட்டிற்கு மாவட்ட செயலாளர் மகேஷ் தலைமை ஏற்றார். வரவேற்புரை கடலூர் மாவட்ட தலைவர் மதன்குமார் வழங்க, நமக்கான அடையாளம் திராவிட மாடல் என்ற மாநாட்டின் கோரிக்கையை வலியுறுத்தியும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல செயலாளர் வழக்கறிஞர் வேலு. குணவேந்தன், தமிழர் உரிமை இயக்கத்தின் அமைப்பாளர் சுப்பு மகேஷ் பேசினார்கள்.

மந்திரம் இல்லை தந்திரமே என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியை மிக சிறப்பாக பெரம்பலூர் துரை. தாமோதரன் நடத்திக் காட்டினார்.

அடுத்து பேசிய கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மாநாட்டின் நோக்கங்களை யும், தேவையையும் மிக தெளி வாகவும் ஆழமான கருத்துக் களுடன் எடுத்துரைத்தார்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாநாட்டின் நோக்கங்களை விளக்கிப் பேசினார். மாநாட்டு நிகழ்வில் புதுச்சேரி பெரியார் சிந்தனையாளர் இயக்க ஒருங்கிணைப்பாளர் தீனா கலந்து கொண்டார். கடலூர் மாவட்டத்தில் தலைவர் மதன்குமார், அமைப்பாளர் ஆசிய ஜோதி, பிரகாஷ் உள்ளிட்ட தோழர்கள் தனி வாகனத்தில் வந்து கலந்து கொண்டனர்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து மாவட்ட தலைவர் இளங்கோவன், சோலை. மாரியப்பன், வெங்கடேசன், கரிகாலன் உள்ளிட்ட தோழர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டில் மயிலாடுதுறை நகர செயலாளர் நடராஜ் நன்றியுரை கூறினார். வந்திருந்த தோழர்களுக்கு மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக மாவட்ட பொருளாளர் பாசித் அனைவருக்கும் குடிதண்ணீர் வசதி ஏற்பாடு செய்திருந்தார்.

தெருமுனை கூட்டங்களில் தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா, மாவட்ட தலைவர் ம.மகாலிங்கம் ஒருங்கிணைத்தனர். விஜயராகவன், செந்தில்குமார், நாஞ்சில் சங்கர், கார்த்திக், தில்லை நாதன், ஜாகிர் உசேன், ராகவன், ஜவகர், பீமாராவ், பாண்டியன், சுரேஷ், மே 17 இயக்கம் கோகுல், த.உ.இ விடுதலையாளன் முரளி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் தாமோதரன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்வுகளின் வழியாக மூடநம்பிக்கை எதிர்ப்புக் கருத்துகளோடு திராவிட மாடல் கருத்துகளையும் சிறப்பாக அனைத்து தெருமுனைக் கூட்டங்களில் பேசினார்.

## இடஒதுக்கீட்டை ஒழிக்க வேண்டும் என்று தீர்ப்பு எழுதியவருக்கு உச்சநீதிமன்ற பதவியா?

உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு இரண்டு நீதிபதிகளை உச்சநீதிமன்ற கொலிஜியம் தற்போது பரிந்துரை செய்திருக்கிறது. கொலிஜியம், எஸ்.வி.இரமணா தலைமையில் நான்கு பேர் அடங்கியக் குழுவைக் கொண்டதாகும். பரிந்துரை செய்யப்பட்ட இரண்டு பேர்களில் ஒருவர் குஜராத் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கும் ஜம்ஷெத் பி. பார்த்திவாலா என்பவர் ஆவார். இவரது பின்னணி மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

2015 டிசம்பர் 1 இல் ஹர்திக் பட்டேல் பிரிவுக்கு தனி ஒதுக்கீடு கேட்ட வழக்கு குஜராத் நீதிமன்றத்தில் வந்த போது, அவர் தெரிவித்த கருத்து கடுமையான சர்ச்சைகளை உருவாக்கியது. அவர் தனது தீர்ப்பில் இவ்வாறு கூறினார். "இந்த நாட்டை அழித்துவரும் இரண்டு கேடுகள் எதுவென்று என்னைக் கேட்டால், ஒன்று 'இட ஒதுக்கீடு', மற்றொன்று 'ஊழல்' என்று நான் கூறுவேன். நாடு சுதந்திரமடைந்து 65 ஆண்டுகளுக்குப் பிறகும் எந்த ஒரு குடிமகனும் இட ஒதுக்கீடு கேட்பது வெட்கக் கேடானது" என்று அவர் கூறியதோடு, "அரசியலமைப்புச் சட்டத்தில், பத்தாண்டுகளுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு நீடிக்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது" என்று அவர் கூறினார். உண்மையில் அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு மட்டும் பத்தாண்டுக்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு அது தொடர்ச்சியாக நீட்டிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. இந்த அடிப்படையான அரசியல் சட்டப் புரிதல் கூட இல்லாமல், எஸ்.சி, எஸ்.டி மக்கள் மீதுள்ள கசப்பான உணர்வின் காரணமாக விஷமக் கருத்துக்களை கக்கியவர் குஜராத்தை சார்ந்த ஜாம்ஷெட்பி பார்த்தி வாலா.

அவர் அப்போதே இப்படியான கருத்துக்களை கூறியவுடன், 58 மாநிலங்களைவை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவருக்கு ஒரு கடிதத்தை எழுதினார்கள். அரசியல் சட்டத்திற்கு எதிராகவும், அரசியல் சட்டத்தின் மாண்பைக் குறைக்கும் வகையிலும் இப்படி ஒரு தீர்ப்பை எழுதியவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். அப்படி கையெழுத்திட்ட 58 மாநிலங்களவை உறுப்பினர்களில் திமுக வைச் சார்ந்த திருச்சி சிவாவும் ஒருவர். காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி உள்ளிட்டவைகள் அதில் கையெழுத்திட்டிருக்கின்றன.

மே 2028 இல் இவர் தலைமை நீதிபதியாக வரக்கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன. நீதித் துறையின் உயர்ந்த மட்டத்தில் அரசியல் சட்டத்தை சரியாகப் புரிந்துக் கொள்ளாதவர்கள், இட ஒதுக்கீடு என்றாலே வெறுப்பைக் கக்கக்கூடியவர்களை உட்கார வைத்து நாட்டில் இராம இராஜ்ஜியத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கு கொலிஜியமும் துணை போகக் கூடாது. இந்த நியமனத்தை எதிர்த்து நாடாளுமன்ற, மாநிலங்களவை, மக்களவையில் கடுமையான கண்டனங்களை எழுப்புவதோடு சமூக நீதியில் அக்கறை உள்ள அத்தனை இயக்கங் களும் இதற்குக் கடுமையான கண்டனங்களை எழுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# சிவத்தலங்கள் அனைத்தும் ஒரே நேர்க்கோட்டில் இருக்கிறதா?

**எட்வின் பிரபாகரன்**

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியத்தின் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (7)**

'நிமிர்வோம்' மாத இதழில் 2020 ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**புதிர் 11:** மனித உடல் என்பது ஓர் உடல் அல்ல, அது மூன்று உடல்களால் ஆனது. அவை (1) ஸ்தூல சரீரம், (2) சூக்ஷ்ம சரீரம், (3) காரண சரீரம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஐம்பூதங் களின் சேர்க்கையால் உருவாக்கப் பட்டது ஸ்தூல சரீரம். ஸ்தூல சரீரத்தை தாண்டி, மனம் மற்றும் புத்தி ஆகியவற்றின் உறைவிடம் சூக்ஷ்ம சரீரமாகும். இந்த சூக்ஷ்ம சரீரம், ஸ்தூல சரீரத்தை சுற்றி ஒரு ஒளிவட்டத்தின் வடிவில் சக்தியாக பரிணமிக்கிறது. மனிதன் இறந்த பின், அவனுடைய ஆன்மா, சூக்ஷ்ம சரீரத்தின் மேலேறி சிறிது காலம் தன் உடலைச் சுற்றி அலைவதாகவும், அந்த சூக்ஷ்ம சரீரத்தை கரைத்து, காரண சரீரமாக மாற்றுவதற்கு தான் இறுதிச் சடங்குகள் செய்யப்படு வதாகவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

1939இல் மின்பொறியாளர் செம்யோன் கிர்லியன் – வேலண்டினா தம்பதியினர் மின்கடத்தும் தட்டின் (Conducting plate) மேல் ஒரு நிழற்படச் சுருளை வைத்துவிட்டு, இன்னொரு மின்கடத்தி யின் மேல் ஒரு மனிதனின் கையை வைத்துவிட்டு, அந்த கடத்திகளின் மேல் மின்சாரத்தை செலுத்தினால், அந்த நிழற்படச்சுருளில் பதியப்படும் கை வடிவத்தைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் தோன்றியிருப்பதை கண்டு பிடித்தனர். குளிர் காய்ச்சலால் (Influenza) கிர்லியன் தாக்கப்பட்டபோது, உடலைச்சுற்றியுள்ள ஒளி வட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன என்பதை கண்டுபிடித்தார். அப்படியானால், ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்கள் இருப்பது உண்மையா? முன்னோர்கள் எப்படி கிர்லியன் நிழற்படம் இல்லாமலேயே இதனை கண்டுபிடித்தனர்?

**விடை:** ஸ்தூல சரீரம் அய்ம் பூதங்களால் ஆனது என்று கூறும் நூலாசிரியர் நீதிபதி ராமசுப்பிர மணியன், சூக்ஷ்ம சரீரம் (மனம் – புத்தி) அதற்கு அப்பாற்பட்டது என்கிறார். இது உண்மையா என்று அறிய, மனம் (mind) என்றால் என்னவென்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி, "மனம் என்பது ஒரு பொருளல்ல. உணர்வுகள், கற்பனை, உள்ளுணர்வு, யோசனை, தீர்ப்பு, மொழி, நினைவு ஆகிய அறிவாற்றல் திறன்களே மனமாகும். இது உருவாகும் இடம் மூளை" என்று தெளிவாக கூறுகிறது. மூளையில் பிராண வாயு (Oxygen), 73% நீர், கொழுப்பு, தனிமங்கள் மற்றும் பல சத்துப் பொருள்கள் உள்ளன. எனவே சூக்ஷ்ம சரீரம் (மனம் – புத்தி) அய்ம்பூதங் களுக்கு அப்பாற்பட்டது என்ற சாஸ்திர கருத்து தவறானது. அதோடு மட்டுமல்லாமல், அய்ம்பூதங்கள் என்ற பதமே தவறானது. "காற்று", "ஆகாயம்" ஆகியற்றை தனித்தனி பூதங்களாக காட்டுவதே பெரும்பிழை.

அடுத்ததாக, சரீரத்தைச் சுற்றி ஒளி வட்டம் உருவாகுவதைப் பற்றி பார்ப்போம். ஒரு மனிதனைச் சுற்றி இயற்கையாக ஒளி வட்டம் உருவானால், அதை படம்பிடித்து, சூக்ஷ்ம சரீரத்தை பார்த்தீர்களா! என்று ஆன்மீகவாதிகள் கூறலாம். ஆனால், நூலாசிரியர் கூறியது என்ன? கிர்லியன் புகைப்படத்தில் ஒளிவட்டம் தெரிவதாகக் கூறியுள்ளார். கிர்லியன் புகைப்படம் இயற்கையானதா? இல்லை என்பதே பதிலாகும். உயர் மின்னழுத்தத்தை ஒரு புகைப்பட தட்டின் மீது செலுத்தும்போது, தட்டின் மீது வைக்கப்படும் கையைச் சுற்றி உருவாகும் செயற்கையான ஒளி தான் கிர்லியன் புகைப்படமாக பதிவாகிறது. உயர் மின்னழுத்தத்தை நீக்கினால், ஒளிவட்டம் மறைந்துவிடும். அப்படியென்றால், ஒளிவட்டத்துக்கு காரணம் மனிதனா? உயர்மின்னழுத்தமா? உயர் மின்னழுத்தமே காரணம். அதோடு மட்டுமல்லாமல், அந்த புகைப்படத் தட்டின் மீது, கைக்கு பதிலாக ஒரு துடைப்பகட்டையை எடுத்து வைத்தாலும், கிர்லியன் புகைப்படத்தில் செயற்கை ஒளிவட்டம் தெரியும். இதை வைத்துக்கொண்டு துடைப்பக்கட்டைக்கு சூக்ஷ்ம சரீரம் உள்ளது என்றும், ஆன்மா உள்ளதென்றும் கூறமுடியுமா?

இந்த ஒளிவட்டம் (Corona) உருவாக மின்னிறக்கமே (Electrical Discharge) காரணமாகும். உயர் மின்னழுத்தத்தின் போது, பாய்மம் (காற்று அல்லது நீர்) அயனியாக்கப்படுகிறது (Ionisation). அதாவது பாய்மம், நேரயனி (+Cation), எதிரயனி (-Anion) என்று பிரிகிறது. இதனால் ஏற்படும் மின்புலமே செயற்கை ஒளி வட்டத்துக்கு காரணம். மற்றவையெல்லாம் நூலாசிரியரின் கற்பனைகள்.

புதிர் 12: பஞ்ச பூதங்களுக்கான சிவத்தலங்கள் (காளஹஸ்தி, காஞ்சி ஏகாம்பரேஸ்வர், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்காவல்) இந்திய வரை படத்தில் கிட்டதட்ட ஒரே நேர்க்கோட்டில் உள்ளன. அதே போல, கேதர்நாத்தில் இருந்து ராமேஸ்வரம் வரை உள்ள சிவத்தலங்கள் ஒரே நேர்கோட்டில் உள்ளன. இந்த அதிசயம் நிகழ்ந்தது எப்படி?

விடை: உலகம் தட்டையாக இருந்தால் தான், வரைபடத்தில் ஒரே நேர்கோட்டில் கோயில்கள் இருப்பதாக கருத முடியும். நம் வசதிக்காக, காகிதத்தில் உலக வரைபடத்தை தட்டையாக வரைந்துவிட்டு, கோயில்கள் ஒரே நேர்கோட்டில் இருப்பதாகக் கோர முடியாது. உலகம் உருண்டையாக இருப்பதால், பஞ்சபூத சிவத்தலங்கள் ஒரே நேர்கோட்டில் இருக்க வைப்பில்லை. தட்டையான உலக வரைபடத்தில் கூட, நூலாசிரியர் சொல்வதைப் போல, கேதர்நாத் கோயிலும், ராமேஸ்வரம் கோயிலும் ஒரே நேர்கோட்டில் இல்லை. இது வெறும் செவிவழிச் செய்தியேயன்றி, உண்மையில்லை. தொலைதூர தகவல்தொடர்பு தொழில்நுட்பங்கள் வளர்ந்திருக்கும் இந்த காலகட்டத்தில், இவ்விரண்டு கோயில்களும் நேர் கோட்டில் இல்லை என்பதை அறிய Google Maps செயலி போதும்.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)

# பல்லக்குத் தூக்குவதை எதிர்த்து குத்தூசி குருசாமி பேசியதற்காக சிறைத் தண்டனை பெற்றார்



பட்டினப் பிரவேசம் என்ற பெயரில் சைவ மடாதிபதிகளை பல்லக்கில் வைத்து தூக்கும் மனித உரிமைக்கு எதிரான செயல் குறித்து திராவிடர் கழகப் பொதுச் செயலாளராக இருந்த குத்தூசி குருசாமி பேசி அந்தப் பேச்சுக்காக மூன்று வாரம் சிறைத் தண்டனைப் பெற்ற வரலாற்றை இளைஞர் களுக்கு நினைவுபடுத்துகிறோம். 1960 ஜூலை 25இல் தஞ்சை மாவட்டம் திருவையாறு என்ற ஊரில் குத்தூசி குருசாமி இவ்வாறு பேசினார்.

"மனிதன் மனிதனைச் சுமப்பது அநீதி. மோட்டார் வாகனம் வந்திருக் கின்ற இந்த நாளில் வாகனத்தையும், 'சாமியையும்' ஒரு லாரியில் வைத்து ஓட்டிச் செல்லலாம், பக்தர்களுக்குச் சுண்டைக்காய் அளவாவது புத்தியிருந் தால். பாட்டாளித் தோழர்கள், அர்ச்ச கரையும் வாகனத்தையும் என்றாவது ஒரு நாள் காவிரியாற்றுப் பாலத்தின் மேலே போகும்போது, தோள்பட்டை வலி பொறுக்கவில்லையே என்று காரணம் காட்டி, தவறுதலாக நடந்ததுபோல், காவிரியாற்றுக்குள் போட்டாலொழிய இதற்கொரு முடிவு காண முடியாது."

இந்தப் பேச்சுக்கும் நாகப்பட்டினத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் இந்தி ஆசிரியர்களை கல்லால் அடிக்கச் சொன்னார் என்று ஒரு பேச்சுக்கும் அன்றைய காங்கிரஸ் ஆட்சி இ.பி.கோ. 117, 295, 323, 304, 326 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர்ந்தது. வழக்கு முறையே திருவாரூர், திருவையாறு நீதிமன்றங்களில் நடந்தது. திருவாரூருக்கும் திருவையாறுக்குமாக அலைந்து கொண்டிருந்தார் குத்தூசி குருசாமி. 1960 நவம்பர் 7ஆம் நாள் திருவாரூர் நீதிமன்றத்தில், மூன்று வாரம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது 'பன்னீர்செல்வம் அல்லது இலட்சியவாதி' என்ற நாடகத்தை சிறையிலேயே எழுதி முடித்தார் குத்தூசி குருசாமி.

**– ஆதாரம் : குருவிக்கரம்பை வேலு எழுதிய குத்தூசி குருசாமி வரலாறு**

## நமக்கான அடையாளம் ‘திராவிட மாடல்’

# மக்கள் பேராதரவுடன் நடந்த சேலம்–தருமபுரி–கிருட்டிணகிரி மாவட்ட பரப்புரைப் பயணம்






- பறை இசைப் பாடல்கள்; வீதி நாடகங்களுடன் திராவிட மாடல் மக்களிடம் விளக்கம்.
- கெலமங்கலம் மண்டல மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் பேச்சு.
- கழகச் செயல்பாட்டாளர்களுக்கு உற்சாகத்தைத் தந்த பரப்புரை நிகழ்வுகள்.

**முதல் நாள் :** 01.05.2022 ஞாயிறு காலை 10.00 மணியளவில் சேலம் - தருமபுரி - கிருட்டிணகிரி மாவட்ட திராவிட மாடல் தொடர் பரப்புரைப் பயண தெருமுனைக் கூட்டம் ஏற்காட்டில் தொடங்கியது. கூட்டத்தில் முதல் நிகழ்வாக பறை முழக்கம், பாடல்கள், வீதி நாடகம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. முதல் நிகழ்வு ஏற்காடு ரவுண்டானா, இரண்டாவது நிகழ்வு ஏற்காடு டவுன், மூன்றாவது நிகழ்வு ஏற்காடு பேருந்து நிலையம், நிறைவாக மஞ்சக்குட்டை ஆகிய பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. மஞ்சக்குட்டை நிகழ்வில் திமுக பொறுப்பாளர் பாபு கலந்து கொண்டு உரையாற்றினார். மாலை 6.00 மணிக்கு கூட்டம் நிறைவடைந்தது. தெருமுனைக் கூட்டத்தில் ஏற்காடு பெருமாள், தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல், தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், ஆத்தூர் மகேந்திரன் ஆகியோர் பயணத்தை விளக்கி உரையாற்றினர். தோழர்களுக்கு காலை , மதிய உணவு ஏற்பாட்டினை ஏற்காடு தோழர்கள் சிறப்பாக செய்திருந்தனர். தோழர்களுக்கு தேனீர் மற்றும் குளிர்பானங்கள் ஏற்பாடுகளை தோழர் பிரேம் ஏற்பாடு செய்திருந்தார். பொதுமக்களிடம் துண்டறிக்கைகள் கொடுக்கப் பட்டன.

**இரண்டாம் நாள் :** 02.05.2022 திங்கள் காலை 11.00 மணிக்கு திராவிட மாடல் பரப்புரைப் பயணம் சின்னப்பம்பட்டி, இளம்பிள்ளை, ஆட்டையாம் பட்டி, கொல்லப்பட்டி, தாரமங்கலம் ஆகிய பகுதி களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பறை முழக்கம், பாடல்கள், வீதி நாடகம் ஆகியவை நடைபெற்றன. பரப்புரைப் பயணத்தை விளக்கி தோழர்கள் ஏற்காடு பெருமாள், ஆத்தூர் மகேந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள். பொதுமக்களுக்கு துன்டறிக்கை கொடுக்கப்பட்டன. பயணத்தில் தலைமை வெளியிட்ட புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

**மூன்றாம் நாள் :** 03.05.2022 செவ்வாய் சேலம் - தருமபுரி - கிருட்டிணகிரி மாவட்ட திராவிட மாடல் பரப்புரைப் பயணம் காலை 9.00 மணியளவில் நங்கவள்ளியில் தொடங்கியது. 11.00 மணி வனவாசி, 1.00 மணி ஜலகண்டாபுரம் அரச மரம், 2.00 மணி ஜலகண்டாபுரம் பேருந்து நிலையம், மாலை 5.00 மணி செட்டி மாங்குறிச்சி, 7.00 மணி எடப்பாடி பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது.

பறை இசை, பாடல்கள், வீதி நாடகம் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு பரப்புரை செய்யப்பட்டது. பரப்புரை நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக தி.மு.க. தலைமைக் கழக பேச்சாளர் கோனூர் கவிஞர் வைரமணி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். தோழர்கள் ஆத்தூர் மகேந்திரன், சேலம் டேவிட், நங்கவள்ளி அன்பு, சேலம் ஆனந்தி ஆகியோர் பயணத்தை விளக்கி உரையாற்றினர். பொது மக்களுக்கு பயணத்தை விளக்கி துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நங்கவள்ளி பொறுப்பாளர்கள் தோழர்கள் கிருஷ்ணன், இராஜேந்திரன், சு.பிரபாகரன், த.கண்ணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். நங்கவள்ளி பகுதி தோழர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

**நான்காம் நாள் :** 04.05.2022 புதன் காலை 10.00 மணியளவில் சேலம் - தருமபுரி - கிருட்டிணகிரி மாவட்ட திராவிட மாடல் பரப்புரைப் பயணம் 4-ம் நாளாக கொளத்தூர் பகுதியில் தொடங்கி கொளத்தூர் தண்டா நான்கு ரோடு, கொளத்தூர் பேருந்து நிலையம், மேட்டூர் RS, மேட்டூர் சின்ன பார்க் ஆகிய நான்கு பகுதிகளில் பரப்புரைப் பயணம் நடைபெற்றது. பரப்புரை பயணத்தை விளக்கி விடுதலை சிறுத்தைகள் கட்சி மேட்டூர் தொகுதி செயலாளர் சிவக்குமார், திராவிட முன்னேற்ற கழகத்தை சார்ந்த கோனூர் வைரமணி, தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல், நங்கவள்ளி அன்பு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சேட்டு குமார் ஆகியோர் உரையாற்றினார்கள்.

பயணத்தில் பறை முழக்கம், பாடல்கள், வீதி நாடகம் ஆகியவை நடைபெற்றன. பயணத்தில் பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் வினியோகிக்கப் பட்டது. கழக வெளியீடு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டது. கொளத்தூர் பரப்புரைப் பயணத்தில் தி.மு.க வை சேர்ந்த கொளத்தூர் ஒன்றிய செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி கலந்து கொண்டார். கொளத்தூர் பேருந்து நிலையத்தில் திரளான பொதுமக்கள் நிகழ்ச்சியை கண்டு களித்தனர்.

கொளத்தூர் பகுதியில் மதிய உணவு படிப்பகத்தில் அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை நகரத் தலைவர் இராமமூர்த்தி மற்றும் நகர செயலாளர் அறிவுச் செல்வன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்

**அய்ந்தாம் நாள் :** 05.05.2022 வியாழன் காலை 10.00 மணியளவில் சேலம் - தருமபுரி - கிருட்டிணகிரி மாவட்ட 5ம் நாள் திராவிட மாடல் பரப்புரைப் பயணம் தருமபுரி மாவட்டம் ஏரியூரில் தொடங்கியது.

2-வது நிகழ்வாக கூத்தப்பாடியில் பரப்புரைப் பயணம் நடைபெற்றது. பயணத்தை விளக்கி விடுதலை சிறுத்தை கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் சரவணன், பெரியார் பெருந்தொண்டர் ஆசிரியர் முனியப்பன், மாவட்ட செயலாளர் சந்தோசு ஆகியோர் உரையாற்றினர்.

3-வது நிகழ்வாக பென்னாகரம் பேருந்து நிலையத்தில் பரப்புரை பயணம். பயணத்தை விளக்கி மக்கள் அதிகாரம் மாயாண்டி, திமுக அசோகன், மாவட்டச் செயலாளர் சந்தோஷ் குமார் ஆகியோர் உரையாற்றினர். 4-வது பரப்புரை கடமடை பகுதியில் நடை பெற்றது. 5-வது இடமாக பரப்புரை B அக்ராஹரம் பகுதியில் நடைபெற்றது. 6-வது இடமாக பரப்புரை பாப்பாரப்பட்டியில் நடைபெற்றது.

7-வது இடமாக பரப்புரை பாலக்கோட்டில் நடைபெற்றது. அனைத்து தெருமுனை பரப்புரை களிலும் பறை முழக்கம், பரப்புரையை விளக்கி பாடல்கள், விரட்டு கலைக்குழுவின் வீதி நாடகம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றன. தருமபுரி மாவட்டம் முழுவதும் பரப்புரைப் பயண சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. பாலக்கோட்டில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் பாலக்கோடு தி.மு.க. பேரூராட்சித் தலைவர் பி.கே.முரளி கலந்து கொண்டு சிறப்பித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்டத் தலைவர் வேணுகோபால், மாவட்டச் செயலாளர் சந்தோஷ்குமார், பரமசிவம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். மதிய உணவு ஏற்பாடுகளை B அக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்த இராமசாமி, நஞ்சப்பன் ஆகியோர் மதிய உணவாக அசைவ உணவை ஏற்பாடு செய்திருந்தனர். இரவு உணவினை காரிமங்கலத்தில் தி.மு.க வைச் சேர்ந்த பேரூராட்சி தலைவர் BCR மனோகரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

**ஆறாம் நாள் :** 06.05.2022 வெள்ளி காலை 10.00 மணியளவில் திராவிட மாடல் பரப்புரைப் பயணம் ராயக்கோட்டை பேருந்து நிலையத்தில் நடை பெற்றது. பயணத்தில் பறை முழக்கம், பாடல்கள், வீதி நாடகம் ஆகியவை நடைபெற்றது. பயணத்தை விளக்கி கே.ஆர்.தோப்பூர் கண்ணன், நங்கவள்ளி அன்பு, கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் ப.வாஞ்சிநாதன் ஆகியோர் உரையாற்றினர். பயணக் குழு தோழர்கள் 5-ம் தேதி இரவு தங்குவதற்கும், உணவு ஏற்பாடுகளையும் கிருஷ்ணகிரி மாவட்ட அமைப்பாளர் ச.கிருஷ்ணன், கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் ப.வாஞ்சிநாதன் அவர்களும் ஏற்பாடு செய்திருந்தனர். தெருமுனைக் கூட்டத்தை முடித்துவிட்டு தோழர்கள் கெலமங்கலம் நோக்கி புறப்பட்டனர். கிருட்டிணகிரி மாவட்டம் கெலமங்கலத்தில் மாலை 4.00 மணிக்கு நமக்கான அடையாளம் திராவிட மாடல் மண்டல மாநாடு தொடங்கியது.

மாநாடு தொடங்குவதற்கு முன்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில்குமார் ஆகியோருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின.

முதல் நிகழ்வாக தமிழர்களின் தொன்மை இசையான பறை முழக்கத்துடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழு, விரட்டு கலைக்குழுவைச் சார்ந்த தோழர்கள் சி.கோவிந்தராஜ், முத்துக்குமார், விரட்டு கலைக் குழுவைச் சார்ந்த தோழர்கள் ஆனந்த், பொன்ராஜ், கொடுக்கை லோகநாதன் ஆகியோர் பரப்புரையை விளக்கி ஜாதி ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு பாடல்களையும், வீதி நாடகத்தையும் நடத்தினர்.

மாலை 5.00 மணியளவில் மாநாடு தொடங்கியது. மாநாட்டுக்கு கிருட்டிணகிரி மாவட்டத் தலைவர் ப.வாஞ்சிநாதன் தலைமை வகித்தார். வரவேற்புரை கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் ச.கிருஷ்ணன். அதனைத் தொடர்ந்து தி.மு.க வைச் சார்ந்த முன்னாள் ஒன்றிய செயலாளர் டி.எம். அரியப்பன், ஆந்திர மாநில பிஎஸ்பி. கட்சியின் பொதுச் செயலாளர் பெனுகொண்டா வால்மீகி ரவிக்குமார் ஆகியோரைத் தொடர்ந்து தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில் குமார் சிறப்புரையாற்றினர்.

அவர் பெரியாரின் பணிகளால் தமிழகம் பெற்ற நன்மைகளை விளக்கியும், அதனை திராவிட மாடல் ஆட்சி முன்னெடுத்துச் செல்லும் பாங்கினையும் விளக்கி விரிவானதொரு உரையை ஆற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி திராவிட மாடல் ஆட்சி இப்போது ஏன் தேவைப்படு கிறது என்பதை விளக்கி உரை நிகழ்த்தினார். குறிப்பாக நாம் நீதிக் கட்சி ஆட்சிக்கு முன்பு கல்வி, வேலைவாய்ப்பில் எப்படி இருந்தோம்; தற்போது எப்படி இருக்கிறோம் என்பதை விளக்கி உரையாற்றினார். இந்தி மொழி அலுவல் மொழியாக மாறியது ஒரு வாக்கு வித்தியாசத்தில் தான் என அறிவர் அம்பேத்கர் கூறியதை நினைவு கூர்ந்தார்.

மாநாட்டுக்கு சேலம், தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டங்களில் இருந்து தோழர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். குறிப்பாக கிருட்டிணகிரி மாவட்டம் பேரிகை, தேன்கனிக்கோட்டை எல மங்களம், நாகமங்கலம், நீலகிரி, அலேசிபம், அனுமந்தபுரம், ஓசூர் ஆகிய பகுதிகளில் இருந்து புதியதாக இளைஞர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். மதியம் 2.00 மணியளவில் மாநாட்டுக்கு வந்திருந்த அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. மாநாடு இரவு 8.00 மணியளவில் கெலமங்கலம் ஒன்றியச் செயலாளர் தோழர் செந்தில் நன்றியுரை கூற நிறைவடைந்தது. பரப்புரை பயணத்தில் கலந்து கொண்ட 25 தோழர்களுக்கும்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூர்–ஈரோடு மாவட்டங்களில் திராவிட மாடல் விளக்கம்

**திருப்பூரில் தெருமுனை கூட்டங்கள் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் “நமக்கான அடையாளம் - திராவிட மாடல்” எனும் முழக்கத்தோடு திருப்பூரில் தெருமுனைக் கூட்டங்கள் 01.05.22 அன்று காலை 11 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் முன்பு உள்ள பெரியார் சிலை அருகிலிருந்து துவங்கியது.

நிகழ்வு பெரியார் பிஞ்சு யாழினி மற்றும் து.சோ.பிரபாகர் ஆகியோரின் பகுத்தறிவு பாடல்களுடன் துவங்கியது. மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு தெருமுனை கூட்டத்தில் துவக்க நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

மதிப்பிற்குரிய திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ் குமார், தெருமுனைக் கூட்டங்களை துவக்கி வைத்து தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சி குறித்தும் ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோத ஆட்சி குறித்தும் சிறப்பானதொரு கருத்துரையை வழங்கினார். கழகப் பொருளாளர் துரைசாமி, தெருமுனை கூட்டங்களின் நோக்கம் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் தலைவர் ஆசிரியர் சிவகாமி, மாவட்டக் கழகச் செயலாளர் நீதிராசன், தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மகிழன், கோவை மாநகர கழகச் செயலாளர் நிர்மல் ஆகியோர் திராவிட மாடல் குறித்து உரையாற்றினர்.

அடுத்து தோழமை அமைப்புகளைச் சேர்ந்த எம்.ரவி, மாவட்டச் செயலாளர், சிபிஐ. - செ.முத்துக் கண்ணன் மாவட்டச் செயலாளர், சிபிஎம் - க.சக்திவேல், மாவட்டச் செயற்குழு உறுப்பினர், மதிமுக - ஆறுமுகம், மாவட்டச் செயலாளர், திராவிடர் கழகம் - துரைவளவன், மா.து.பொதுச்செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - ஜெயம் செந்தில், தமிழக வாழ்வுரிமைக் கட்சி - தெ.மா.செயலாளர், அர.விடுதலைச் செல்வன் துணைப் பொதுச்செயலாளர், ஆதித்தமிழர் பேரவை - ஆ.இராமகிருஷ்ணன், திமுக - கருவம்பாளையம் பகுதி துணைச் செயலாளர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் கழகத்தின் மாநில மாவட்ட மாநகர பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் திரளாய் பங்கேற்றனர். மதியம் 1.00 மணியளவில் முதல் தெருமுனை கூட்டம் நிறைவுற்றது. கழக ஆதரவாளர் பாண்டியன் நகர் பாண்டியன் கழகத் தோழர்களுக்கு மதியம் அசைவ உணவு வழங்கினார்.

அடுத்தடுத்து தெருமுனைக் கூட்டங்கள் புதிய பேருந்து நிலையம்,கணக்கம் பாளையம், திருமுருகன்பூண்டி பகுதிகளில் இரவு வரை நடைபெற்றது.

புதிய பேருந்து நிலையத்தில் மாதவன் தலைமையில் நடைபெற்றது. கோவை நேருதாஸ், நீதிராசன், சந்தோஷ், மாரிமுத்து ஆகியோர் உரையாற்றினர். நன்றியுரை : சரஸ்வதி.

கணக்கம்பாளையத்தில் மாதவன் தலைமையில் துரைசாமி, சிவகாமி, நிர்மல் பிரசாந்த் ஆகியோர் பேசினர். நன்றியுரை : பரந்தாமன்.

திருமுருகன் பூண்டியில் திலகவதி தலைமையில் கிருஷ்ணன் அவர்கள் (காங்கிரஸ் மாநகர மாவட்ட தலைவர்) சங்கீதா, சந்தோஷ் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தோழர் ராஜசிங்கம் நன்றி கூறினார்.

**ஈரோடு :** ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கல்வி உரிமையைத் தடுக்காதே! மாநில உரிமைகளைப் பறிக்காதே! மதவெறியைத் திணிக்காதே! நமக்கான அடையாளம் திராவிட மாடல் - தெருமுனைக்கூட்டம் 2 ஆவது நாள்பரப்புரை பயணம் முதல் கூட்டம் நம்பியூர் பேருந்து நிலையம் பகுதியில் எலத்தூர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழக மாவட்ட செயலாளர் சென்னியப்பன், புஇமு வெங்கட், திவிக தலைமை கழக பேச்சாளர் வேலுச்சாமி, ரமேசு, கழக வெளியீட்டு செயலாளர் இராம .இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினார்கள், நம்பியூர் ஒன்றிய தோழர்கள் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். மதியம் உணவு இடைவேளைக்கு பின் 2 வது கூட்டம் கொளப்பலூர் பேருந்து நிறுத்தம் பகுதியில் கொளப்பலூர் பேரூராட்சி மன்ற தலைவர் அன்பரசு துவக்கி வைத்து உரையாற்றினார். தொடர்ந்து பரப்புரையின் நோக்கம் குறித்து மாவட்ட செயலாளர் வேணுகோபால், வேலுச்சாமி, இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினார்கள். மாவட்ட கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நமது அடையாளம் திராவிட மாடல் மூன்றாவது நாள் பரப்புரை பயணத்தின் முதல் கூட்டம் அந்தியூர் பகுதியில் 8.05.2022 ஞாயிறு தொடங்கியது. நிகழ்விற்கு மாவட்ட தலைவர் நாத்திகசோதி தலைமையேற்க வீரா கார்த்திக் வரவேற்புரை நிகழ்த்தினார். பரப்புரை பயணத்தை வாழ்த்தி வேங்கை பொன்னுசாமி (தமிழ்புலிகள்), தோழர்கள் பன்னீர்செல்வம், பெருமாள் (தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பு) ஆகியோரும், பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தை விளக்கி வேணுகோபால் (மா.செயலாளர் திவிக), இராம. இளங்கோவன் (மாநில வெளியீட்டுசெயலாளர்) ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். தோழர்களுக்கு தமிழ்நாடு அறிவியல் மன்ற தோழர்கள் தேனீர் ஏற்பாடு செய்தனர்.

மதிய உணவுக்கு பின் திராவிட மாடல் மூன்றாவது நாள் பரப்புரை பயணத்தின் இரண்டாவது கூட்டம் குருவரெட்டியூரில் வேல்முருகன் தலைமையில் தொடங்கியது. திலிபன் வரவேற்க பயணத்தை வாழ்த்தி குருவை ஊராட்சி மன்றத் தலைவர் அசோக்குமார், மக்கள் சிந்தனை பேரவை தைரியமணி, முன்னாள் கவுன்சிலர் சம்பூர்ணம் ஆகியோரும்,பயணத்தின் நோக்கத்தை விளக்கி இராம. இளங்கோவன் உரையாற்றினார்கள் .

மூன்றாவது நாள் பரப்புரை பயணத்தின் மூன்றாவது கூட்டம் பவானி அந்தியூர் பிரிவில் வட்ட செயலாளர் வேணுகோபால் தலைமையில் தொடங்கியது. நிகழ்வில் பவானி நகர்மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன், திமுக நகர செயலாளர் ப.சி.நாகராசன், பாலமுருகன் (இந்திய கம்யூனிஸ்ட்), ஆற்றலரசு (விசிக), ஆகியோர் வாழ்த்துரை வழங்க இரமேசு, வேணுகோபால், இராம.இளங்கோவன் ஆகியோர் பரப்புரை பயணத்தின் நோக்கத்தினை விளக்கி உரையாற்றினார்கள். வினோத் நன்றி கூறினார். நிகழ்வில் மாவட்ட கழகத்தின் திவிக தோழர்களும், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர்களும் கலந்து கொண்டனர்

# இராசிபுரத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா

இராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக் கழக சார்பில், அம்பேத்கர் பிறந்த நாள் விழா, ஆணவப் படு கொலைக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த வழக்கறிஞர் ப.பா மோகன் பாராட்டு விழா, உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற (தி.மு.க.கூட்டணி) முதல் நகர்மன்ற பெண் தலைவர், மற்றும் நகர்மன்ற பெண் உறுப்பினர்களுக்கு நினைவு பரிசு வழங்கும் விழா நடைபெற்றன.

இம்முப்பெரும் விழா 25.04.2022 அன்று மாலை 5 மணியளவில், ராசிபுரம் கன்னட சைனியர் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்கு, திராவிடர் விடுதலைக் கழக நகரச் செயலாளர் பிடல் சே குவேரா தலைமை வகித்தார்.திராவிடர் விடுதலை கழக நகர அமைப் பாளர் சுமதி மதிவதனி வரவேற்பு கூறினார்.

நிகழ்விற்கு, மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, இராசிபுரம் நகரத் தலைவர் அன்பரசன், வெண்ணந்தூர் ஒன்றிய பொறுப்பாளர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த வழக்கறிஞர் ப.பா மோகன் ஏற்புரை வழங்கினார்.

கார்த்திகேயன் வழக்கறிஞர் மாவட்ட குழு உறுப்பினர் சிபிஐ, நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், திமுக நகர கழக செயலாளர் என்.ஆர். சங்கர், திமுக முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.பாலு, சுந்தரம் , நகர கூட்டுறவு வங்கி முன்னாள் இயக்குனர்.

நிகழ்வில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழக ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை, வழக்கறிஞர் அய்யாசாமி, தொழிலாளர் விடுதலை முன்னணி, எஸ்டிபிஐ



ஆகிய தோழமை இயக்கங்களின் பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மக்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள் வழங்கி நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டது. நிகழ்வில் சிறப்பு அழைப் பாளராக பங்கேற்றவர்களுக்கும், மற்றும் இந்த விழா சிறப்பாக நடை பெற உறுதுணையாக இருந்தவர் களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த முப்பெரும் விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு இரவு உணவும் வழங்கப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகம் மல்லசமுத்திரம் ஒன்றிய பொறுப் பாளர் பெரியண்ணன் நன்றி கூறினார்.

3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.

குறிப்பாக ஆறு நாட்கள் பயணத்தில் 28 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப் பட்டது. 950 கி.மீ பயணம் செய்யப்பட்டது. 5000 துண்டறிக்கைகள் மக்களிடம் வழங்கப்பட்டது. பயணத்தில் விற்கப்பட்ட கழக வெளியிட்டு புத்தகங்களை காவல்துறையைச் சார்ந்தவர்கள் அதிகமாக வாங்கியது மகிழ்வாக இருந்தது.

மே-1 முதல் 6 வரை பரப்புரையில் கலந்து கொண்டதோழர்கள் - ஒருங்கிணைப்பாளர்கள் - சி.கோவிந்தராஜ், இரா .டேவிட் தலைமைக்குழு உறுப்பினர்கள் - அ.சக்திவேல், காவை ஈஸ்வரன்.

பேச்சாளர்கள் - நங்கவள்ளி அன்பு, ஏற்காடு பெருமாள், ஆத்தூர் மகேந்திரன். விரட்டு கலைக்குழு - ஆனந்த், பொன்ராஜ், கொடுக்கை லோகநாதன். தோழர்கள் - சு.குமரப்பா, அண்ணாதுரை, முத்துக்குமார், சித்துசாமி, கிருஷ்ணன், ராஜேந்திரன், பிரபாகரன், தங்கதுரை, காளியப்பன், சீனிவாசன், கண்ணன், சுசீந்திரன், நாகராஜ், இளவரசன், மாரிமுத்து, முத்துராஜ், இராமச்சந்திரன்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th May 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN